முருகப்பெருமான் துணை

**மகான் பீர்முகமது அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**24.03.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. மண்மனை தேடி அலையும் மானிடா
   மடிந்துபோய் இறுதியில் மண்ணேஉமை உண்ணும்
   இன்னும் இந்த சூட்சுமம் அறியா
   எல்லாம் தமக்கென அலைவது ஏனடா
2. ஏனடா பிறவிக் குழிக்குள் செல்லா
   ஏகாந்த ரகசியம் பலவும் இருக்க
   மானிடா கண்டுணரத் தேடடா
   மாயைக்குள் விழுந்து அழிவதேனடா
3. அழிவிலா ஞானவாழ்வு தர
   அரங்கனாய் ஆறுமுகன் வந்திருக்க
   தெளிவுடனே அரங்கன் வாழ் குடிலை
   தேடிவரத் தேறுவீர் எனக்கூறி
4. கூறியே துல்லிய ஆசிதனை
   குறைவிலா சோபகிருது சேல்திங்கள்
   ஈரைந்தோர் திகதி கதிர்வாரம்
   (சோபகிருது வருடம் பங்குனி மாதம் 11ம் நாள், 24.03.2024, ஞாயிற்றுக்கிழமை)
   இயம்பிடுவேன் பீர்முகமது யானும்
5. யானும் உலகநலம்பெற உரைப்பேன்
   உண்மை நெறிகாட்டும் அரங்கன்
   ஞானவழிகளை மக்களெல்லாம்
   நம்பிக்கை வைத்து கடைபிடிக்க
6. கடைபிடிக்க தன்னை அறிதலும்
   களிம்பான மனமாசு அகற்றி
   சோடை தடைகளை வெல்லுகின்ற
   சூட்சும ரகசியங்கள் விளங்கி
7. விளங்கியே பிறவிப் பயனை
   வினவிடுவேன் தொடர் பூசைபலமுடன்
   களங்கமறச் செய்யும் தருமத்தால்
   கலியுக மக்கள் கடைத்தேற்றம் அடைவர்

8. அடையவே அரங்கமகா ஞானி
அற்புதமான வாழ்க்கை முறைக்கு
தடையற அருளும் ஞானமே
தயவும் தருமம்கூடிய வழிமுறை ஆகும்

9. ஆகவே உலகமக்கள் தானும்
அரங்கா முருகா என வேண்டி
வகைபட பிரணவக் குடில் நோக்கி
வணங்கி வந்து சரணாகதி

10. சரணாகதி முழுமைபட கொண்டிட
சற்குருவாய் சகலதுமாய் இருக்கும்
அரங்கன் அவதார மகிமை புரியும்
அழியாமை பெற்ற ஞானி எனும்

11. எனும் சூட்சுமம் விளங்கி
இறுகப்பற்றி வாழும் வழிமுறை
தானாகக் கூடியே உலகினில்
தவசிகளாக வாழ நேரும்

துல்லிய ஆசி முற்றே

–சுபம்–